**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 46 of 2024

DATE : 23.10.2025

Depositions of witness for Prosecution

PW: 4

| | | | |
|---|---|---|---|
| Name | பால்ராஜ் | Caste | |
| Father/Husband's Name | பெரியசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23th day of October 2025

**(எதிரி ஆஜர். வழக்கறிஞர் திரு கார்த்திக் குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் அக்கனாபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.அ.சா.1 யை தெரியும். வழக்கச் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க முகவரி கொடுத்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அனுமதியின்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை : –**

கடந்த 13.12.2022 அன்று மதியம் 2:50 மணி அளவில் அழகாபுரி டு வத்திராயிருப்பு செல்லும் மெயின் ரோட்டில் மீனாம்பிகை பேருந்து பயணிகளை

ஏற்றிச் செல்லும் பொழுது அதில் பயணம் செய்த சோலையம்மாள் என்பவர் பேருந்து படிக்கட்டில் இருந்து தவறி விழுந்து விட்டதாகவும், அதில் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றும், காயம்பட்ட அவரை ஆம்புலன்ஸில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், மேற்படி காயம்பட்டு நபர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –** இல்லை

**மறு விசாரணை : –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு